செ. கு. எண்:173 நாள்: 06.11.2017

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 6.11.2017**

---

மூத்த பத்திரிகையாளரும், சென்னை பத்திரிகையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளருமான திரு. மோகன் அவர்கள் நேற்று (5.11.2017) மாரடைப்பால் காலமானார் என்ற செய்தி அறிந்து துயரம் அடைந்தேன்.

பல்வேறு பத்திரிகைகளில் பணியாற்றியவரும், கடின உழைப்பாளியும், அனைவரிடமும் எளிமையாக பழகக்கூடிய பண்பாளருமான திரு. மோகன் அவர்களின் மறைவு பத்திரிகை துறைக்கு பேரிழப்பாகும்.

திரு. மோகன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், பத்திரிகை துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**